Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

Calendar .. .. }
Miscellaneous .. .. }
Preliminary Register .. .. } **S.C. 18**/2021
Sessions .. .. }
} Prosecution – **PW**30
Deposition of witness for } Defence –
} Court –

Name : பாலமுருகன்

Father/Husband Name : பெரியசாமி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.12.2023

(எதிரிகள் 3, 4, 5, 6, 8, 10, 11, 12, 14, 16 ஆஜர், எதிரிகள் 2, 7, 9, 15, 17, 18 ஆஜர் இல்லை. 2, 7, 9, 15, 17, 18 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

முதல் விசாரணை–

நான் தற்போது வாலாந்தரவை அம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் தேங்காய் வியாபாரம் பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன குண்டுமணி என்ற பூமிநாதன் மற்றும் 27 விஜய் ஆகியோர்களை தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு கேணிக்கரை காவல் ஆய்வாளர் அழைத்தன்பேரில்

கேணிக்கரை காவல் நிலையத்திற்கு நான் மட்டும் சென்றேன். அங்கு வாலாந்தரவை கிராம நிர்வாக அலுவலர் இருந்தார். காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் காவல் ஆய்வாளர் கையெழுத்து வாங்கினார். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது. ஆனால் என்னிடம் காட்டப்படும் கையெழுத்துக்களை நான் தான் போட்டேன். எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.48** ஆகும். மேலும் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.49** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

போலிசார் விசாரணையில் கடந்த 07.06.2018ம் தேதி காலை 08.00 மணியளவில் கேணிக்கரை ஆய்வாளர் அழைத்தன் பேரில் நானும், வாலாந்தரணை கிராம நிர்வாக அலுவலர் மகேஸ்வரன் என்பவரும் கேணிக்கரை காவல் நிலையம் சென்றோம் என்றும் அப்போது இவ்வழக்கில் தொடர்புடைய எதிரியான முனியசாமி என்ற பீஸ்குட்டி என்பவரை போலிசார் காவலில் வைத்திருப்பதாகவும் ஆய்வாளர் எதிரியை எங்கள் முன் விசாரித்தார் என்றும் அப்போது எதிரி முனியசாமி என்ற பீஸ்குட்டி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த வாக்குமூலத்தில் நானும், கிராம நிர்வாக அலுவலர் மகேஸ்வரன் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அடிப்படையில் காவல் ஆய்வாளரும், நானும், எதிரிகளுடன் சம்பவ இடம் சென்று எதிரி சம்பவ இடத்தை அடையாளம் காட்டி நடந்த சம்பவத்தை காலை 09.30 முதல் 10.00 மணி வரை செய்து காண்பித்தார் என்றும் பின்பு எதிரியும் நாங்களும் ஏந்தல் பஸ்ஸ்டாப்பிற்கு அருகில் வடக்குப்பக்கம் உள்ள வேலிக்கருவேல முள் புதருக்குள் அழைத்து சென்று தான் சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக இரும்பால் ஆன கத்தியை அடையாளம் காட்டி எங்கள் முன்பு ஆஜர் செய்தார் என்றும் அதை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னால் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும் அதில் நானும், மற்றொரு சாட்சியான கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்து செய்தோம் என்றும்

போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளும் நானும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 18**/2021 |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW**29 |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சசிக்குமார் |
| Father/Husband Name | : | வேலுச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of <u>15.12.2023</u>

<u>(எதிரிகள் 3, 4, 5, 6, 8, 10, 11, 12, 14, 16 ஆஜர், எதிரிகள் 2, 7, 9, 15, 17, 18 ஆஜர் இல்லை. 2, 7, 9, 15, 17, 18 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)</u>

முதல் விசாரணை–

நான் வாலாந்தரவை அம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் இராமேஸ்வரத்தில் புரோட்டா மாஸ்டராக வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன 27 விஜய், குண்டுமணி என்ற பூமிநாதன் ஆகியோர்கள் எனது மருமகன்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். 27 விஜய், குண்டுமணி என்ற

பூமிநாதனும் போலயன் நகரில் செல்வம் என்பவரது வீட்டிற்கு முன்பு இறந்துவிட்டார்கள். அவர்கள் இருவரும் யார் தாக்கி இறந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 20.05.2018ம் தேதி போலயன் நகரில் செல்வம் என்பவர் குழந்தைகளுக்கு காதணிவிழா நடந்தது என்றும், அந்த விழாவிற்கு நானும் சென்றேன் என்றும் காதணி விழா முடித்துவிட்டு அன்று இரவு செல்வம் வீட்டிற்கு முன்பு போட்டிருந்த பந்தலை சுற்றி நான், பில்லாணி, ராஜேந்திரன், பஞ்சவர்ணம், விஜய் மற்றும் இந்த வழக்கில் இறந்துபோன 27 விஜய், குண்டுமணி என்ற பூமிநாதன் ஆகியோர்கள் தூங்கிக்கொண்டிருந்தோம் என்றும் செல்வத்தின் வீட்டிற்குள் பெண்கள் அனைவரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள் என்றும் நானும், என்னுடன் படுத்து தூங்கியவர்கள் லைட் வெளிச்சத்தில் தூக்கம் வராமல் புரண்டு படுத்துக் கொண்டிருந்தோம் என்றும் அன்று இரவு 09.30 மணியளவில் வழக்கின் எதிரிகளான கார்த்திக், தர்மா ஆகியோர்கள் கையில் ஆளுக்கொரு அருவாளும், மற்ற எதிரிகள் ஆளுக்கொரு அருவாளும் வைத்து நின்று கொண்டார்கள் என்றும் அப்போது எதிரி கார்த்திக், தர்மா ஆகியோர்கள் இவர்களை ஓடிவிடாமல் சுற்றி நின்று மறைத்து நின்றார்கள் என்றும் எதிரி கார்த்திக் குண்டுமணி எ ன்ற பூமிநாதனின் வலதுபக்க காதுக்கு மேல் வெட்டினார் என்றும் பூமிநாதன் அந்த இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும் எதிரி அருண் அருவாளால் 27 விஜயின் இடது ஆள்காட்டி விரல், கழுத்து ஆகிய இடங்களில் வெட்டி கொலை செய்து விட்டார் என்றும் எங்களுடன் உறங்கிக் கொண்டிருந்த விஜய் என்பவரை பெருங்குளம் முத்துமாரி என்பவர் அருவாளால் உச்சந்தலை, கழுத்து ஆகிய இடங்களில் வெட்டி காயம் ஏற்படுத்தினார் என்றும் அவர்கள் வெட்டுவரை பார்த்து நாங்கள் எல்லாம் கத்தினோம் என்றும் எங்கள் சத்தம் கேட்டு வீட்டிற்குள் தூக்கிக்கொண்டிருந்த முத்து லெட்சுமி, பிருந்தா, கோவிந்தம்மாள், சரண்யா ஆகியோர்கள் ஓடிவந்தார்கள் என்றும் நாங்கள் எல்லோரும் காயம்பட்டு கிடந்த விஜயை 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு

அனுப்பி வைத்தோம் என்றும் விசாரணையில் சொல்லியிட்டு தற்போது எதிரிகளும் நானும் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.